**23.08.2022 O.S.No. 120 / 2012 (PW3) செல்வநாதன் த-பெ. வேதமாணிக்கம்,**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

1) சர்வே எண்.26/8A என்று எந்த ஆவணத்தை வைத்து பிரித்தோம் என்றால் வாய்மொழியாக பாகம் பிரித்ததை வைத்து பிரித்தோம். அதன் அடிப்படையில்தான் வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.9 வரை ஆவணங்கள் ஏற்பட்டது என்றால் சரிதான். வாய்மொழியாக ஏற்பட்ட பாகப் பிரிவினையை வைத்து சொத்தை பிரித்து பட்டா மாறுதல் செய்ய சட்டப்படி முடியாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து தரிசாகத்தான் உள்ளது என்றால் 4,5 வருடமாகத்தான் தரிசாக உள்ளது. தாவா வழக்கு தாக்கல் செய்யும் முன்பு வரை தோட்டம் வைத்தோம். தாவா வழக்கு தாக்கல் செய்த பிறகு விவசாயம் செய்யவிடவில்லை. பிரதிவாதிகள் செய்யவிடவில்லை. யார் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. அவ்வாறு தடுத்ததாக நாங்கள் காவல் நிலையத்தில் ஏதும் புகார் கொடுக்கவில்லை.

2) நான் தாவா சொத்தில் எந்த காலத்திலும் விவசாயம் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பட்டா எண்கள்.552, 485, 147 ஆகியவைகள் ஆகும். பட்டா எண் 159 என்பது தாவா சொத்து இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 என்பது பட்டா எண்.159க்கு உரியது, அது தாவா சொத்திற்கு சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல, அது எனது சித்தப்பா இடம். நான் ஏற்கனவே பட்டா எண்.159 தாவா சொத்து இல்லை என்று சொல்லியிருந்தால் அது தவறானது. தாவா சொத்துக்களுக்கு எத்தனை பட்டாக்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.20 வரை உள்ள வரி ரசீதுகள் என் பெயரிலும், எனது சகோதரர் பெயரிலும் ஏற்பட்ட தவறான பட்டாவின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட ரசீது என்றால் சரியல்ல.

3) வா.சா.ஆ.21 ஆவணம் மூலமாக மாவட்ட வருவாய் அலுவலர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின்மீது எந்த உத்தரவு ஏற்பட்டது என்றால் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளும்படி உத்தரவிடப்பட்டது. வா.சா.ஆ.21 ஆவணம் மூலம் பிரதிவாதிகள் மாவட்ட வருவாய் அலுவலர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்ததில் எங்கள் பெயரில் ஏற்பட்ட பட்டாவை மாறுதல் செய்யச் சொல்லி மனு தாக்கல் செய்தார்கள். இந்த மனுவின் மீது ஆஜராவதற்கு நாங்கள் பயந்து கொண்டு தாவா வழக்கை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம்.

4) மேற்படி வருவாய் அலுவலர் நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவில் எங்களுக்கு தவறாக கொடுத்த பட்டாவை ரத்து செய்துவிடுவார்கள் என்பதால்தான் தாவா வழக்கை பொய்யான காரணங்களைக் கூறி தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.29 ஆவணத்தின் SLRல் பெரியய்யா அம்பலம் மகன் சுப்புராமன் அம்பலம் என்பது சுழிக்கப்பட்டு பூமிநாதன் -1, சௌர்ணம் -2, கார்டியன் தாயார் சிட்டாள் கணவர் பெயர் சுப்புராமன் அம்பலம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் முதல் தாளான அ பதிவேட்டிலும் மேற்படி பெயர்கள்தான் வருகிறது என்றால் சரிதான்.

A DHARANIDHARAN Deposition Digitally signed by A DHARANIDHARAN Location: District Munsif Court, Devakottai 2022.08.23 11:30:11 +0530

5) மேற்படி நபர்களிடம் இருந்து நாங்கள் கிரையமோ, வேறு ஏதேனும் ஆவணங்களோ வாங்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.31ல் இருந்து வா.சா.ஆ.36 வரை தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் எங்கள் பெயரில் தவறாக பட்டா ஏற்பட்டதன் பேரில் கொடுக்கப்பட்ட வரி ரசீதுகள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.37 முதல் வா.சா.ஆ.40 வரை தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் தாவா சொத்து இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் 1977ல் ஏற்பட்டது. SLRல் என்ன பதிவு ஏற்பட்டதோ அந்த பதிவுகளும், மேற்படி வா.சா.ஆ.37 முதல் வா.சா.ஆ.40 வரை வருகிறது என்றால் இருக்கலாம்.

6) நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் தாவா சொத்துக்களுக்கு சம்மந்தமில்லாத நபர்களிடம் ஆவணங்கள் பெற்றுவிட்டு பிரதிவாதிகளின் சொத்தை அபகரிப்பதற்காக மோசடியான ஆவணங்களை ஏற்படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்மந்தமில்லாத நபர்களிடம் இருந்து ஆவணங்களைப் பெற்று அதன் அடிப்படையில் பட்டா மாறுதல் செய்து தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தாவா வழக்கில் எங்களுக்கு எந்தவிதமான பரிகாரமும் கிடைக்கக்கூடியதில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை.**

A DHARANIDHARAN

Deposition
Digitally signed by A DHARANIDHARAN
Location: District Munsif Court, Devakottai 2022.08.23 11:30:11 +0530